பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை 07.06.2022 கதிர் 214

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் கட்சிகள் நேற்றுத் தமக்குள் கூடி கலந்துரையாட இருந்தன. எனினும் அக் கூட்டங்கள் நேற்று நடைபெறாமல் இன்றைய தினத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

21 ஆவது திருத்தம் 2

# தன் முழு ஆட்சிக் காலத்தையும் முடித்தே செல்வாராம் கோட்டா!

## தோற்றுப் போன ஜனாதிபதியாக விலகவும் விரும்பவில்லை மீண்டும் தேர்தலில் போட்டியிடும் எண்ணமும் இல்லையாம்



கொழும்பு, ஜுன் 07

“ஜனாதிபதியாக நான் பணியாற்றுவதற்கு ஐந்து வருட ஆணையை இலங்கை மக்கள் எனக்குத் தந்திருக்கின்றார்கள். அதைப் பூர்த்தி செய்த பின்னர்தான் வெளியேறுவேன். தோற்றுப் போன ஜனாதிபதியாக நான் போக முடியாது. எனினும் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன்.”

– இவ்வாறு உறுதிபட தெரிவித்து இருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. புளும்பேர்க் நிறுவனத்துக்கு தாம் அளித்த வழமைக்கு மாறான அரிதான செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். 2

# ரணிலால் முடியாது!

## விமல் வீரவன்ஸ அதிருப்தி



கொழும்பு, ஜுன் 07

பொருளாதார நெருக்கடிக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை கிடையாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 2

## தான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நிலைமை மோசமடைந்திருக்கும் என்கிறார் ரணில்

நான் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நிலைமை இன்னும் மோசமடைந்து இருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் –

நாட்டின் தற்போதைய நிலைக்கு கொவிட் காரணமில்லை.பல நாடுகள் கொவிட்டின் பின்னர் மீண்டும் முன்னேற்ற பாதையில் பயணிக்கின்றன. பொருளாதாரத்தை தவறாக கையாண்டமையே இந்த நிலைக்கு காரணம்.

2019 இல் பிரதமர் 12



## ஜோன்ஸ்டனைக் கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் களத்திலாம்!

முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் கண்டு பிடிப்பதற்காக பல பொலிஸ் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

மே 9ஆம் திகதி அலரிமாளிகை 12

## எரிபொருள் விலை மீண்டும் அடுத்த வாரம் அதிகரிக்கும்

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக ஜுன் மாத நடுப்பகுதியில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என ஐக்கிய தொழிற்சங்க அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

மே 24ஆம் திகதி மின்சக்தி அமைச்சர் 12

## ‘21’ குறித்து அமைச்சரவைக்குள் இழுபறி அடுத்த வாரத்துக்கு விடயம் ஒத்திவைப்பு!

அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் மேலும் கலந்துரையாடி, சகல தரப்புகளினதும் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம், ஜனாதிபதி தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது. இதன்போது திருத்தியமைக்கப்பட்ட 21ஆவது திருத்தச்சட்டமூலம் நீதி அமைச்சரால் முன்வைக்கப்பட்டது.


எனினும் அதனையொட்டி அமைச்சரவைக்குள் 12

## சீமெந்து விலை ரூ.3,000 ஆனது

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 50 கிலோ கிராம் சீமெந்து மூடையின் அதிகபட்ச சில்லறை விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் 12

## அல்வாயில் 4 வயதுச் சிறுமியை நள்ளிரவில் கடத்த முயற்சியாம்

பேர்த்தியாருடன் உறங்கிக் கொண்டிருந்த 4 வயதுச் சிறுமியை நள்ளிரவு நேரம் வீடு புகுந்து நபர் ஒருவர் கடத்த முயற்சி மேற்கொண்டார் எனப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 2



## தடுக்கப்பட்ட ரஷ்ய விமானம் புறப்பட்டது

இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த ரஷ்ய விமானம் நேற்று மாலை இலங்கையில் 2

## 3 நாள்களில் ஐந்தாவது சூட்டுச் சம்பவம் நேற்றும் ஒருவர் பலி; தெற்கில் அதிர்ச்சி

கொழும்பு, ஜுன் 07

தெற்கில் கடந்த மூன்று நாள்களில் ஐந்தாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

கொழும்பு -15 முகத்துவாரம் – ரெட்பாணாவத்தை எனும் இடத்தில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 12



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொடர்பில் அரசினுடைய முடிவும், இந்தத் திருத்தம் தொடர்பான நகல் வரைவும் இன்னமும் இறுதி செய்யப்படாத நிலையில் அது பற்றிக் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்க முடியாது எனக் கருதி இக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன எனத் தெரிகிறது

21 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் வரைவு நேற்று மாலை அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டமையால், அந்த வரவைப் படித்த பின்னர் பேசுவதற்காகத் தமிழ்க் கட்சிகளின் நேற்றைய கூட்டங்கள் இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுபிற்பகல்3மணிக்குவவுனியாவில் கூட இருந்தனர்.

அதனை ஒத்திவைத்து இன்று கூட்டமைப்பு எம்.பிக்கள் காலையில் நாடாளுமன்றில் தனியாகக் கூடி 21ஆவது திருத்தம் குறித்து முடிவு செய்வதென தீர்மானித்தனர்.

தமிழ்க் கூட்டமைப்பையும் உள்ளடக்கிய ஏனைய தமிழ் கட்சிகளின் கூட்டம் நேற்று மாலை 7 மணிக்கு மெய்நிகர் முறையில் நடைபெறுவதாக இருந்தது. அதன்படி தலைவர்கள் கூடினர். எனினும் 21 ஆவது திருத்த வரைவு கைக்குக் கிடைக்காத நிலையில் இந்தக் கூட்டத்தை இன்று இரவு நடத்துவதென அவர்கள் தீர்மானித்து நேற்றைய கூட்டத்தை 15 நிமிடங்களில் ஒத்திவைத்தனர்.

எனினும் 21 ஆவது திருத்தம் தொடர்பில் அரசு தரப்புக்குள் இன்னமும் முடிவு எட்டப்படவில்லை. அமைச்சரவையும் நேற்று இவ்விடயத்தில் எந்த இணக்கத்தையும் எட்டாத சூழலில் அதனை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்திருக்கின்றது. அதனால் இவ்விடயத்தை ஒட்டிய தமிழ் கட்சிகளின் கூட்டமும் இன்று நடைபெறுவதும் சந்தேகமாகவே கருதப்படுகின்றது.

21 ஆவது திருத்த வரைவை ஒட்டி அமைச்சரவையில் நேற்றுக் காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன எனத் தெரிகிறது. தனியாளாக வாங்கிக் கட்டும் பக்கத்தில் பிரதமர் ரணில் இருந்தார் எனவும், ஆக அவருக்குப் பக்கபலமாக ஜனாதிபதியே கருத்துகளை எடுத்துரைத்தார் எனவும் கூறப்பட்டது.

புதிதாக எந்தக் கடன் உதவியையும் ரணில் கொண்டு வரவில்லை என்றும், பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்தபோது இந்தியாவிடம் உதவியாக பெற்ற கடன்களையே ரணில் இப்போது பயன்படுத்துகிறார் என்றும் சில அமைச்சர்கள் வெளிப்படையாகக் குறிப்பிட்டனர் என்று கூறப்பட்டது.

சக்கர வியூகத்தை உடைத்துக் கொண்டு தனியாளாக உள்நுழைந்த அபிமன்யு, வெளியே வர முடியாமல் சிக்கியமை போல தனியாளாக அமைச்சரவைக்குள் புகுந்து பிரதமர் பதவியைக் கைப்பற்றிய ரணில், இப்போது வியூகத்திற்குள் மாட்டியவர் போல அமைச்சரவையில் மாட்டுப்பட்டு முழுசுகின்றார். அவ்வளவுதான். பாவம் அவர்!

★ ★ ★

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிரான வழக்கின் நேற்றைய தீர்ப்புப் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இவ்வளவு பாரதூரமான குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்ட பின்னரும் – பெருமளவு அபராதமும் தண்டமும் விதிக்கப் பட்ட பின்பும் – அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைதான் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் அவரது எம்.பி. பதவிக்கு ஆபத்து இல்லை.

தீர்ப்பின் முழு விவரமும் வெளியே இன்னும் வராவிடினும் எனக்கு என்னவோ ஓர் ஒழுங்கின் கீழ்தான் – ஓர் இணக்கப்பாடு போல – இத்தீர்ப்பு வந்திருக்கும் எனத் தோன்றுகின்றது

அமைச்சர் ரணதுங்கவின் சட்டத்தரணிகள் குற்றச்சாட்டை சவாலுக்கு உட்படுத்தாமல் சமரசமாக இந்தத் தீர்ப்பைப் பெற்றனரோ என்று கருத முடிகின்றது.

இத்தகைய வழக்குகளில் மேன்முறையீட்டுக்குப் போவது ஆபத்தானது. சம்பந்தப்பட்ட தரப்பினர் குற்றச்சாட்டுகளைச் சவாலுக்கு உட்படுத்தாமல், ஒப்புக்கொண்டு போகும் நிலைப்பாட்டை எடுத்திருந்தால் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு வாய்ப்பு இருக்காது. அது மாத்திரமல்ல, நிரூபிக்கப்பட்ட இத்தகைய குற்றங்கள் மேன்முறையீட்டில் உறுதிப்படுத்தப்பட்டால் தண்டனையை மேலும் வலுப்படுத்தப்படும் விதத்தில் மேன்முறையீட்டின் தீர்ப்பு வந்து விடுவதுமுண்டு. அதாவது தப்பித்தவறி இந்த வழக்கை மேன்முறையீட்டுக்குக் கொண்டு சென்று, அங்கு நீதிமன்றம் வேறு மாதிரி முடிவெடுத்தால், இத்தகைய குற்றங்களுக்கு இந்தளவு தண்டனை போதாது என்ற அடிப்படையில், அது மேலும் அதிகரிக்கப்படவும் வாய்ப்புண்டு. அத்தகைய நிலையில் இப்போது அரும்பொட்டில் தப்பிய தம்முடைய எம்.பி. பதவியையும் பிரசன்ன ரணதுங்க பறி கொடுப்பதோடு சிறைக் கம்பிகளையும் எண்ண வேண்டி நேர்ந்து விடலாம்.

ஆகவே பெரும்பாலும் வினையை ஏன் விலைக்கு வாங்க வேண்டும் என்று கருதி அவர் மேன்முறையீட்டை தவிர்ப்பார் என்றே நினைக்கிறேன்.

இது தொடர்பில் இன்னும் இரண்டு கொசுறுத் தகவல்கள்.

ஒன்று – நேற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் நீதிமன்றத்தில் இருந்து நேரடியாக அமைச்சரவைக் கூட்டத்திற்குச் சென்றாராம் பிரசன்ன ரணதுங்க. அதாவது தீர்ப்பு வந்த பின்னர் அமைச்சரவைக்கு செல்லும் தயார் நிலையிலேயே அவர் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். தீர்ப்பின் மீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்திருக்கின்றது.

அடுத்தது – இந்தக் குற்றத் தீர்ப்பைப் பெற்றுக்கொண்ட பிரசன்ன ரணதுங்க அமைச்சர் மட்டுமல்லர், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதம கொறடாவும் அவர்தான். இதற்கு முன்னர் இந்தப் பதவியில் இருந்தவர் அப்போது அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ. இந்தப் பதவிக்கு சரியான ஆள்களைத்தான் கோட்ட அரசு தேடிப் பிடித்து நியமிக்கிறது என்பது நேற்றைய தீர்ப்பு தெளிவாகத் தெரியப்படுத்தியிருக்கின்றது.

– மின்னல் –

## ரணிலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றவுடன் உலக நாடுகள் வரிசையில் நின்று இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என ஒரு சிலர் எதிர்வு கூறினார்கள்.

ஆனால் தற்போது அவ்வாறான நிலைமையைக் காண முடியவில்லை. எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதமளவில் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்க்கொள்ள நேரிடும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

உணவு தட்டுப்பாட்டை வெற்றிக் கொள்ள நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்களை அரசாங்கம் இதுவரைச் செயற்படுத்தவில்லை.

சமையல் எரிவாயுப் பிரச்சினையை நகர்ப்புற மக்களைப் போல் கிராமப்புற மக்களும் எதிர்க்கொண்டுள்ளார்கள். எரிவாயு விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைக்கு தீர்வு காண அரசாங்கம் நட்பு நாடுகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவில்லை.

நட்பு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக நட்பு நாடுகளை பகைத்துக் கொள்ளும் சூழ்நிலைமை தற்போது காணப்படுகிறது.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இலங்கை சர்வதேச மட்டத்தில் தீர்மானமிக்க தருணங்களை எதிர்க்கொண்ட வேளையிலும்,பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்ட போதும் முழுமையான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

இவ்விரு நாடுகளும் இலங்கையின் பிரதான நட்பு நாடுகளான உள்ளன. சீனாவுடன்பகைமையைஏற்படுத்தியுள்ள தருணத்தில் தற்போது ரஷ்யாவையும் பகைத்துக்கொள்ளும் தன்மை காணப்படுகிறது.

எரிபொருள்,உரம்,டொலர் உள்ளிட்ட பல பிரச்சினைகளை இலங்கை எதிர்க்கொண்டுள்ள போது ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். ரஷ்யாவின் ஏரோபுளொட் விமானம் இலங்கையில் இருந்து வெளியேற கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் தடை விதித்துள்ளதால் இலங்கைக்கு வருகை தரும் ரஷ்யாவின் சுற்றுலாப் பயணிகளின்எண்ணிக்கைவீழ்ச்சியடையும்.

ரஷ்யாவின் விமானத்திற்குத் தடையுத்தரவைப் பிறப்பித்தால், அதனால் சுற்றுலாத்துறைக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து நீதிமன்றம் அவதானம் செலுத்தாமலிருப்பது வியப்பிற்குரியது.

தற்போதைய நெருக்கடியான நிலையில் சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இருப்பினும் தற்போது அந்த பொறுப்பான தன்மையை நிறைவேற்று துறையிலும், சட்டவாக்கத்துறையிலும். நீதித்துறையிலும் அவதானிக்க முடியவில்லை.

## தன் முழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இயற்கை விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் தமது இரசாயன உரக் கடை பெரும் பின்னடைவைத் தந்து விட்டது என்பதை அந்த பேட்டியில் அவர் ஒப்புக்கொண்டார்.

அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இது (இங்கிருக்கும்) என்ன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை? நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை என்றால் ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அந்த முறைமையை முழுமையாக ஒழித்து விட்டு, வெஸ்ட்மினிஸ்டர் பாணி நாடாளுமன்ற ஆட்சி முறைக்குப் போக வேண்டும். இரண்டும் கலந்த ஒரு முறைமை சரி வரவே வராது. இந்த அனுபவம் எனக்கு உள்ளது. இதை நான் மக்களிடம் இப்போது கூறப்போனால் மக்கள் என்னைத் தவறு என்பார்கள். ஆனால் அதுதான் உண்மை.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதற்கு நாம் நீண்ட காலம் தாமதித்து விட்டோம். ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்துக்கு முன்னர் நாணய நிதியத்திடம் நாம் போயிருந்தால் இன்றைய இந்த நிலைமை வந்திருக்காது.

நாங்கள் நிதி, சட்ட ஆலோசகர்களை நியமித்து இருக்கிறோம். அது கடன் தவணைச் செலுத்துகைகளை மீளக் கட்டமைப்பதற்கு. ஆனால் அந்த நாடுகளிடம் நாம் தனித்தனியாகவும் பேசவேண்டும். எங்களுக்கு அதிகம் கடந்த நாடுகள் சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பரிஸ் கிளப்.

நான் சீனாவிடமும் இந்தியாவிடமும் உதவி கோரியுள்ளேன். நானே நேரடியாக அந்த நாடுகளின் தலைவர்களுடன் பேசிக் கோரிக்கை விடுத்துள்ளேன்.

கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுடன் உரையாடி உள்ளேன். சவூதி மற்றும் ஓமான் போன்ற நாடுகளிடம் நீண்டகால கடனில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் உதவியை நானே கோர உள்ளேன்.

மானியம் வழங்கும் முறைமைகள் தொடரத்தான் வேண்டும். அரசு ஊழியர்களிலோ, இராணுவத்திலோ நாம் ஆள் குறைப்புச் செய்ய முடியாது. எனினும் புதிய நியமனங்களை நாம் செய்யாமல் குறைத்துக் கொள்ளலாம்.

அரசியலில்நான்ஜனாதிபதி. ஆனால் உங்களுக்குத் தெரியும் நான் அரசியல்வாதி அல்லன். நீங்கள் அரசியலில் நீண்ட காலம் இருந்தால், உங்களுக்கு மேலதிக சுமைகள் இருக்கும். உதவுவதற்கு நண்பர்களும் இருப்பார்கள். நீங்கள் அவர்களுக்கு எதிராகப் போனீர்களானால் – நான் அப்படித்தான் எதிராகப் போக முயன்றேன் – உங்களுக்கு உதவி கிட்டாமல் போகும். – என்றார் ஜனாதிபதி கோட்டாபய.

## அல்வாயில் 4 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அல்வாய் மேற்குப் பகுதியில் உள்ள வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோதே 4 வயதுடைய சிறுமியைக் கடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் முன்பக்கம் விறாந்தையில் சிறுமி பேர்த்தியாருடன் உறங்கிக் கொண்டிருந்தார். சிறுமியின் சகோதரனும் அருகே உறங்கிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில்நேற்றுத்திங்கட்கிழமை நள்ளிரவைத் தாண்டி சிறுமியை யாரோ ஒருவர் தூக்கி வைத்திருப்பதை பேர்த்தியார் அவதானித்துள்ளார். அந்த நபர் முகமூடி அணிந்திருப்பதைக் கண்டு அச்சத்தில் அவர் கூக்குரல் இட்டுள்ளார்.

இதனையடுத்து சிறுமியை விட்டு விட்டு முகமூடி அணிந்த நபர் தப்பியோடி தலைமறைவானார் என சிறுமியின் வீட்டார்பருத்தித்துறைபொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடுக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருந்து புறப்பட்டது தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்படுவதைத் தடுக்கும் வகையில் கடந்த 2 ஆம் திகதி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் அந்தத் தடை உத்தரவை இடைநிறுத்தி உத்தரவிட்டது. அதையடுத்து விமானம் நேற்று ரஷ்யாவுக்குப் புறப்பட்டது.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாப விமோசனம்

**நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் விதத்தில் தாம் முன்வைத்திருக்கும் அரசமைப்புத் திருத்த நகலை பரிசீலனைக்கு எடுத்து, அதனடிப்படையில் முன்னேறுவதற்கு ஜனாதிபதியும் ஆட்சித் தரப்பும் இணங்குமானால், அரசில் இணைந்து செயற்படத் தயார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இரான் விக்கிரமரட்ண எம்.பி. அறிவித்திருக்கின்றார்.**

**நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புத் தொடர்பில் இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரு தலைவர்களுமே அண்மைக் காலத்தில் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

**நாட்டில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் சூடு பிடித்து, வன்முறைக் கிளர்ச்சி வடிவத்தை எட்டி, ஆளும் கட்சியினர் இலக்கு வைக்கப்பட்ட சமயத்தில் அதைத் தணிக்கும் விதத்தில் நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய உரையில் சில வாக்குறுதிகளை ஜனாதிபதி வழங்கினார்.**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் இருந்தபடி ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றைப் பழையபடி குறைக்கும் விதத்தில் 21ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படும் என உறுதி கூறிய ஜனாதிபதி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையும் மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்று வருகின்றது, அது குறித்தும் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று அப்போது கூறியிருந்தார்.**

**ரணில் விக்கிரமசிங்கவும் புதிய பிரதமராகப் பதவியேற்ற பின்னர், நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியமையோடு, அதை எப்படி, எப்போது, என்ன அணுகுமுறையில் முன்னெடுப்பது என்பதை அரசியல் கட்சிகள் முடிவெடுக்க வேண்டும் என்று கோடி காட்டினார்.**

**நாட்டின் ஆட்சி முறை மாற்றம் உட்பட்ட விடயங்கள் அடங்கிய புதிய அரசமைப்பைத் தாம் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவு செய்வார் என பதவியேற்ற காலத்தில் அறிவித்திருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவர் பதவியேற்று இரண்டரை வருடங்களாகி விட்டன. இன்னும் அவருக்கு மிச்சம் இருப்பது இரண்டே கால் வருட ஆட்சிதான்.**

**ஆட்சியதிகாரத்தின் இறுதிக் கால கட்டத்தில் – அந்தத் தில் – யாராவது அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வருவார்களா? அது சாத்தியமானதா? – என்று நல்லாட்சி அரசைப் பார்த்து முன்னர் நக்கல், நையாண்டி பண்ணியவர்கள் இதே கோட்டாபய ராஜபக்ஷவும், அவரின் அரசியல் வழிகாட்டியும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவும்.**

**ஆகவே, கோட்டாபய ராஜபக்ஷவின் மிஞ்சிய ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது இனிப் பெரும்பாலும் சாத்தியமேயில்லை.**

**தமது பதவிக் காலத்தில் தம்மை வாக்களித்துத் தெரிவு செய்த மக்களினாலேயே பெரிதும் வெறுத்து ஒதுக்கப்படும் பிரமுகராக மாறியிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரை, பெரும்பாலும் இந்த ஆட்சிக்காலம் அவரின் அரசியலிலும் அந்தம்தான்.**

**அந்த அரசியலுக்கு நல்லதோர் முடிவுரை எழுதி, கௌரவமான வழியனுப்பை அவர் பெறுவதற்கு நல்லதோர் வாய்ப்பு இந்த நிறைவேற்றதிகார ஆட்சிமுறைக்கு முடிவு கட்டும் திட்டம். 44 ஆண்டுகளாக இந்த நாட்டை பெரும் அவலத்துக்குள் ஆழ்த்தியிருக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் நல்லதொரு பணியையாவது, இத்துணைச் சீரழிவு வேலைகளுக்குப் பின்னர் அவர் செய்ய முன்வருவாராயின் அது சிறிய அளவிலாவது அவருக்குப் பாப விமோசனமாக அது அமையும்.**

# தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக முதல்வரின் நடவடிக்கை தேவை

### கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில் அவர்களின் உடல்நிலை மிகவும் மிகவும் மோசமடைந்துள்ளது.

இந்நிலையில் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப் படாதமை உண்மையில் ஏமாற்றத்தையும் மனவேதனையையும் தருகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு அவர்களை விடுவிப்பதற்கு தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப தாயகம் திரும்புவதற்கோ அல்லது தொடர்ந்தும் தமிழகத்தில் இருப்பதற்கோ உரிய ஏற்பாடுகளைத் தமிழக முதலமைச்சர் செய்ய வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலை யுத்தம் காரணமாகவே இங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருபவர்களுக்கு அடைக்கலம் தருவோம் எனக் கூறிக் கொண்டே ஈழத் தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருக்கின்றமை என்பது உண்மையில் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

ஆகவே அவர்களை விடுவிப்பதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். – என்றார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும்!

### அருட்தந்தை சிறில்காமினி கோரிக்கை

நாட்டுக்குப் பிரயோசனமளிக்கும் அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்கவேண்டும்.

என்றாலும் தற்போதைக்கு அதனை செய்ய முடியாத நிலை இருப்பதால் சமர்ப்பிக்க இருக்கும் 21 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

அரசமைப்பின் 21 ஆம் திருத்தம் ஏன் கொண்டுவரப்படவேண்டும் என்ற தொனிப் பொருளில் மக்கள் பேரவையின் சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்ட செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக விடயங்களை 20ஆம் திருத்தம் இல்லாமலாக்கி, தனி ஒரு நபருக்கு கீழ் வரையறை இல்லாத அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

அதன் பாதிப்பை தற்போது நாங்கள் அனுபவித்து வருகின்றோம். அதனால் 21ஆம் திருத்தத்தின் தேவை தற்போது உணரப்பட்டு வருகின்றது. அதனால் 20 இல் இருக்கும் ஜனநாயக விரோதே விடயங்கள், நாட்டுக்கு பொருத்தமில்லாத விடயங்களை இல்லாமலாக்கியே 21 கொண்டுவரப்படவேண்டும்.

அதேபோன்று 19ஆம் திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக விழுமியங்களை மீண்டும் அரசமைப்புத்திருத்தத்துக்குள் உள்வாங்கவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் 19 ஐ விடக் குறைந்த, பலவீனமான திருத்தங்களை கொண்டுவர அனுமதிக்கமுடியாது. குறிப்பாக 19 இல் இருக்கும் இரட்டைப் பிரஜா உரிமை இருப்பவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாக இருக்க முடியாது என்ற அத்தியாயத்தை 21இலும் உள்வாங்கவேண்டும்.



அத்துடன் ஜனாதிபதி அமைச்சு பதவி வகிக்கும் விடயத்தில், அவர் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை மாத்திரம் வகிக்க முடியும். இவ்வாறு இல்லாமல் வேறு அமைச்சுக்களின் நிறுவனங்களைத் தனக்கு கீழ் வைத்துக்கொள்ள முடியாது.

அமைச்சர்களை மாற்றும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க முடியாது. இந்த திருத்தங்கள் 21இல் உள்வாங்கப்படவேண்டும்

மேலும் சுயாதீன நிறுவனங்களின் மீது ஜனாதிபதி மற்றும் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமலாக்கப்படவேண்டும். குறிப்பாக நீதித்துறை, பொலிஸ் திணைக்களம் என்பவற்றில் அரசியல்வாதிகளின் தலையீட்டை இல்லாமலாக்கவேண்டும்.

அப்படியானால்தான் நீதியை நிலைநாட்ட முடியும். எனவே நாட்டுக்கு பிரயோசனமான அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக இல்லாமலாக்கப்படவேண்டும்.

என்றாலும் தற்போதுள்ள நிலைமையில் அதனைச் செய்ய முடியாமல் இருப்பதால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். – என்றார்.

# சிறுவர்கள் மத்தியில் பரவுகின்ற வைரஸ் காய்ச்சல்

கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் சிறுவர்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைரஸால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உடலில் சிவப்புக் கொப்புளங்கள் தோன்றுகின்றன என குழந்தை நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்நோய் இலகுவாகப் பரவும் என்றும் ஒரு தடவை தொற்றுக்கு உள்ளான சிறுவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது கொடிய நோயல்ல என்றும் 6 மாதம் முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பரசிற்றமோல் போன்றவற்றைக் குடிக்கக் கொடுத்து வீட்டில் ஓய்வெடுக்க வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# தாய்வானுக்குள் சீனா படை எடுத்தால் அமெ. இராணுவ ரீதியில் பதிலடி தரும்

தாய்வானுக்குள் படையெடுப்பு ஏதும் ஏற்பட்டால் தாய்வானைப் பாதுகாக்க வொஷிங்டன் இராணுவ ரீதியில் அதில் ஈடுபடத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் தெரிவித்திருக்கின்றார்.

இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கடந்த மாத இறுதியில் ஜப்பானின் பிரதமர் கிஷிடா புமியோவை ஜப்பானில் பிடென் சந்தித்தார்.

ஜப்பானிய பிரதமருடன் ஒரு கூட்டுச் செய்தியாளர் சந்திப்பின் போது, தாய்வான் ஜலசந்தியின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஒருதலைப்பட்சமாக நிலைமையில் எந்த மாற்றத்தையும் தடுப்பதற்கும் வொஷிங்டனின் உறுதிப்பாட்டை பைடன் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

தாய்வானைப் பாதுகாக்க அமெரிக்கா இராணுவ ரீதியில் ஈடுபடத் தயாரா என்று கேட்டதற்கு, அவர் உறுதிமொழியாக இந்தப் பதிலை அளித்தார், இது அமெரிக்கா எடுத்த உறுதிமொழி என்றும் அவர் கூறினார்.

தாய்வான் ஜலசந்தியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஆதரிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அது (தாய்வானை சீனா கைப்பற்றுவது) நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் ஜப்பான் மற்றும் பிற நாடுகளுடன் அமெரிக்கா உறுதியாக நிற்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.


இதற்குப் பிறகு, அமெரிக்காவும் ஜப்பானும் மற்ற 11 நாடுகளுடன் இணைந்து இந்தோ – பசுபிக் பொருளாதாரக் கட்ட



மைப்பைத் தொடங்கும். இந்த கட்டமைப்பானது பிராந்தியத்தில் உள்ள எங்களின் நெருங்கிய நண்பர்கள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பாகும், மேலும் பொருளாதார போட்டித்தன்மையை உறுதி செய்வதில் மிகவும் முக்கியமான சவால்கள் ஆகும், என்று அவர் மேலும் கூறினார்.

வெள்ளை மாளிகை அறிக்கையின் படி, உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போருக்குப் பதிலளிப்பதில் ஜப்பானியப் பிரதமர் கிஷிடாவின் தலைமைத்துவத்தையும், ஜப்பானின் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதற்கான அவரது உறுதியையும் பைடன் பாராட்டினார். ஒரு வலுவான அமெரிக்க – ஜப்பான் கூட்டணி இந்தோ – பசிபிக் பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் மூலக்கல்லாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட கொரியாவின் அணுசக்தி மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை திட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டத்திற்கு எதிராக செயல்படும் சீனாவின் பெருகிய முறையில் பலவந்தமான நடத்தை உள்ளிட்ட பாதுகாப்பு



சவால்களை எதிர்கொள்ள இரு தலைவர்களும் நெருக்கமாக இணைந்து பணியாற்ற உறுதிபூண்டுள்ளனர் என இந்தச் சந்திப்பின் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், விநியோகச் சங்கிலி பாதுகாப்பு மற்றும் சுத்தமான எரிசக்தி போன்ற துறைகளில் ஒத்துழைப்பை ஆழமாக்க இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

இரு தலைவர்களின் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜப்பானிய பிரதமர், இந்தோ – பசுபிக் பகுதியில் உக்ரைன் சூழ்நிலையின் தாக்கம் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர் எனக் கூறினார்.

சீனாவைப் பொறுத்தவரை, சீனக் கடற்படையின் சமீபத்திய செயல்பாடுகளையும், சீனாவின் கூட்டு இராணுவப் பயிற்சியையும் கண்காணிக்க நாங்கள் இணங்கிக் கொண்டோம். அதேசமயம், பலத்தால், பலவந்தத்தால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். – என்றும் ஜப்பான் பிரதமர் கூறினார்.

இதற்கிடையில் –

ஜப்பானில் கடந்த மாதத்தில் நடந்த குவாட் உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, சீன வெளியுறவு மந்திரி வாங்யீ ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் மூலோபாயத்தை சாடினார். நான்கு நாடுகளின் இந்தக் குழுவானது (குவாட் அமைப்பு) சுதந்திரம் மற்றும் திறந்த தன்மை என்ற போர்வையில் உருவாக்கப்பட்டாலும் அதன் நோக்கம் சீனாவைக் கட்டுப்படுத்துவது தான் என்று அவர் குற்றம் சாட்டினார்.

குவாங்சோவில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரியுடன் நடத்திய பேச்சின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தோ – பசுபிக் வியூகம் பற்றி கேட்ட போது, அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் வியூகம் சர்வதேச சமூகத்தில், குறிப்பாக ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் மேலும் மேலும் கவனவீர்ப்பையும் கவலையையும் ஏற்படுத்துகிறது. என வாங் கூறினார்.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**

# தமிழக நிவாரணப் பொதிகள் கிளிநொச்சியில் வழங்கிவைப்பு





கிளிநொச்சிக்கு நேற்று (திங்கட்கிழமை) விஜயம் செய்த இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீராகேஸ் நடராஜ் இந்தியாவின் தமிழக அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று பகல் 10 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவு பொதிகளை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அரசு திணைக்களத்தின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை வாழ் மக்களுக்கு உதவிடும் வகையில் அண்மையில் தமிழக அரசு அத்தியாவசிய நிவாரணப் பொருள்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது.

அந்தவகையில் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்திற்கு 4 ஆயிரத்து 450 பொதிகளில் 2 லட்சத்து 22 ஆயிரத்து 500 கிலோ கிராம் அரிசியும் 50 பொதிகளில் ஒரு கிலோ நிறையுடைய 750 பால்மா பைக்கெற்றுக்களும் கிடைக்கப்பெற்று கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10 ஆயிரத்து 900 பயனாளிகளுக்கும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 720 பயனாளிகளுக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 380 பயனாளிகளுக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரம் பயனாளிகளுக்குமாக மொத்தமாக 20 ஆயிரம் பயனாளிகளுக்கு இந்த நிவாரணப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 60 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான கைக்கடிகாரங்களை பயன்படுத்தும் அரசியல் வாரிசு

இலங்கையின் பிரபல அரசியல் குடும்பமொன்றின் வாரிசு ஒருவர் 60 லட்சம் ரூபா தொடக்கம் 70 லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரங்களை பயன்படுத்துகின்றாார் என தெரியவந்துள்ளது.

இலங்கையின் கைக்கடிகார செயின் மற்றும் பர்ஸ் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள சிட்னி என்பவர் மேற்குறித்த பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவர் கோட்டா கோ கம போராட்டக்களத்திலும் முன்னின்று அரசாங்கத்துக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்கும் எதிராக போராடிக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணல் ஒன்றில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு –

இலங்கையின் முக்கிய அரசியல் குடும்பமொன்றின் வாரிசு ஒருவர் பயன்படுத்தும் கைக்கடிகாரங்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டவையாகும். படேக் பிலிப் மற்றும் ரோலக்ஸ் போன்ற விலை உயர்ந்த கைக்கடிகாரங்களை மட்டுமே அவர் பயன்படுத்துகின்றார்.

அவற்றில் ஒவ்வொன்றும் 60 தொடக்கம் 70 லட்சம் பெறுமதி கொண்டவையாகும். அவரிடம் உள்ள கைக்கடிகாரங்களை விற்பனை செய்தால் மட்டுமே இலங்கைக்கு எட்டுக்கும் மேற் பட்ட எண்ணெய்க் கப்பல்களை தருவித்துக் கொள்ள முடியும்.

அவரது சகோதரர்களும் அவ்வாறான பெறுமதியான கைக்கடிகாரங்களையே ஏராளமாக பயன்படுத்துகின்றனர். அவை அனைத்தும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும் என்றும் சிட்னி தொடர்ந்தும் தெரிவித்தார்.

## போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 12 பேர் நாவலப்பிட்டியில் கைதாகினர்

நாவலப்பிட்டி நகரில் மிக நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார், கம்பளை பொலிஸார் மற்றும் கம்பளை போதை ஒழிப்பு பிரிவு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே குறித்த 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதில் பிரதான சந்தேகநபர் ஒருவரும் ஏனைய 11 பேரும் போதை விற்பனை பிரதிநிதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கைது செய்தபோது, அவர்களிடமிருந்து 2 ஆயிரத்து 880 மில்லிகிராம் ஹெரோயின், 560 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29 – 45 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் நாவலப்பிட்டி, ஓவிட்ட, ஆகரஓயா, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேநபர்கள் நாவலப்பிட்டி பதில் நீதிவான் சுனெத்ரா கொட்டவலகெதர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# கோம்பையன்மணல் இந்துமயானம் புதுப்பித்து திறந்துவைக்கப்பட்டது







(கலையமுதன்)

யாழ் மாநகர சபையினதும் வண்ணை கோம்பையன்மணல் இந்து மயான பரிபாலசபையினதும் மற்றும் நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்புடன் புதுப்பொலிவு பெற்ற யாழ்.கோம்பையன் மணல் இந்து மயானத்தின் நுழைவாயில், ஆலயக் கட்டடம், இரண்டு தகனமேடை, காவலாளி அறை என்பன சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், வண்ணை கோம்பையன் மணல் இந்து மயான பரிபாலசபையினர், நன்கொடையாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கோம்பையன் மணல் இந்து மயானத்தின் நுழைவாயில், ஆலயக் கட்டடம், தகனமேடை, காவலாளி அறை என்பனவும் விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டன.

# சமூக வலைத்தள ஊடகங்களை முடக்க வரி அறவீடுகள் மூலம் முயற்சியாம்

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை



வரி அறவீடுகள் மூலம் சமூக வலைத்தள ஊடகங்கள் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக சமூக வலைத்தள பாவனையை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தின் சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

வரி அறவீடுகள் மூலம் சமூக வலைத்தள ஊடகங்கள் மீது நேரடியாகவும், மறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் ஊடாக சமூக வலைத்தள பாவனையை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கோட்டா கோ ஹோம் உள்ளிட்டவற்றின் குரலை முடக்கியதைப் போன்று சமூக வலைத்தளங்களின் குரல்களையும் முடக்குவதற்கான நடவடிக்கையே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் களைப்படைந்து விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். இவை குறுகிய காலத்துக்கே.

காரணம் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றும் நாள் வெகுதொலைவில் இல்லை. இரு வருடங்களாக ராஜபக்ஷ சாபத்தின் அவல நிலைமையை அனுபவித்து வருகின்றோம்.

பெண்களின் சுகாதார நலன் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது எம்மை விமர்சித்தனர். இன்று கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் மந்த போசணை அதிகரித்து வருகிறது. இரசாய உரத்தைத் தடை செய்து , விவசாயத்தை முழுமையாக சீரழித்து விட்டு, தற்போது விவசாயத்தில் ஈடுபடுமாறு கோருகின்றனர்.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விவசாயத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.

தற்போது சில வைத்தியசாலைகளில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதே போன்று மருந்து தட்டுப்பாட்டுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனினும் இவற்றில் எதனைப் பற்றியும் பதவிகளுக்காக வரிசைகளில் காத்திருப்பவர்களுக்கு கவலை கிடையாது. மருத்துவ தேவைகளுக்காக தூதுவர்கள் வெளிநாடு செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால் அவர்கள் டொலரைப் பெற்றுக் கொள்வதற்காகவே வெளிநாடு செல்கின்றனர் என்று பொய் கூறுகின்றனர். இவ்வாறு பொய் கூறி யாரை ஏமாற்ற எண்ணுகிறீர்கள்?

இந்தியாவிலிருந்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா கிடைக்கவுள்ளதாகக் கூறுகின்றனர். அவ்வாறு அந்த உரத்தொகை கிடைக்குமானால் எதிர்வரும் இரு தினங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உரத்தை இறக்குமதி செய்தால் மாத்திரம் போதுமா? கிருமி நாசினிகள் , கலைக்கொள்ளிகள் நாட்டில் இருக்கின்றனவா? இவை எவையும் இல்லை என்றும், மிகவும் நெருக்கடியாக உள்ளது என்றும் கூறுவதற்காகவே பொறுப்பை ஏற்றனர்?

சவாலை ஏற்றால் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க வேண்டும். பொறுப்பினை ஏற்றவர்கள் விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனில், ஐக்கிய மக்கள் சக்தி விவசாயிகளுடன் வீதிக்கு இறங்கி மாபெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும். – என்றார்.

# இலங்கைக் கிரிக்கெட் மகளிர் அணிக்கு கிளிநொச்சி மாணவி ஒருவர் தெரிவானார்!





இலங்கையின் 19 வயதுக்குட்பட்டவர்களைக் கொண்ட தேசிய மகளிர் கிரிக்கெட் அணிக்கு, வடக்கு மாகாணம் கிளிநொச்சியில் இருந்து கலையரசி எனும் தமிழ் மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டு ஆயுத மோதல் காரணமாக மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து, இந்த மாணவி மேற்படி அணிக்குத் தெரிவாகியுள்ளமை பல்வேறு தரப்புகளின் கவனங்களையும் ஈர்த்துள்ளது.

கிளிநொச்சி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் 10 ஆம் வகுப்பு படிக்கும் கலையரசிக்கு 16 வயதாகிறது. சிறிய வயதிலிருந்தே – தான் கிரிக்கெட் விளையாடி வருகிறேன் என அவர் தெரிவிக்கின்றார்.

கலையரசியின் தந்தை சதாசிவம் – கூலி வேலை செய்பவர், அம்மா சசிகலா – இல்லத்தரசி. ஒரு தம்பியும், தங்கை ஒருவரும் கலையரசியின் உடன் பிறந்தவர்கள்.

“வயல் வெளிகளில் அண்ணாமார் கிரிக்கெட் விளையாடும் போது, எனது சின்ன வயதில் அவர்களுடன் சேர்ந்து நானும் விளையாடுவேன். எனது அப்பாதான் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்”. – என்கிறார் கலையரசி.

அவரின் தந்தை தாம் ஒரு கிரிக்கெட் ரசிகர் என்கிறார். “தொலைக்காட்சிகளில் கிரிக்கெட் போட்டிகளை விரும்பிப் பார்ப்பேன். எனது பிள்ளைகளையும் கிரிக்கெட்டில் சேர்த்து விட வேண்டுமென்று மனதுக்குள் ஓர் ஆசை இருந்தது. அது இப்போது மகள் மூலம் நிறைவேறியிருக்கிறது. தேசிய மகளிர் அணியில் எனது மகள் விளையாடுவதைப் பார்க்க வேண்டும்” – என, தனது ஆசையை சதாசிவம் பகிர்ந்து கொண்டார்.

பாடசாலைகளுக்கிடையிலும், கிளிநொச்சி மாவட்டம், வடக்கு மாகாணம் போன்ற மட்டங்களிலும் விளையாடியுள்ள கலையரசி 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார்.

19 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு வீரர்களை இணைத்துக் கொள்வதற்கான தேர்வு – கடந்த மார்ச் மாதம் தம்புள்ளவில் நடைபெற்ற போது, அதில் கலையரசியும் கலந்து கொண்டார். இந்த நிலையில், மேற்படி அணிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என, மே இறுதியில் அறிவிக்கப்பட்டதாக, கலையரசியின் பயிற்சியாளர் ஜீவரட்ணம் பிரியதர்ஷன் கூறினார்.

“கலையரசி 07ஆம் வகுப்பு படிக்கும் காலத்திலிருந்து அவருக்கு பயிற்சியளித்து வருகின்றேன். மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடந்த போட்டிகள் அனைத்திலும் அவர் பிரகாசித்துள்ளார். கலையரசியின் கடுமையான அர்ப்பணிப்புத் தான் அவர் இந்த நிலையை எட்டுக்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளது” எனவும் பிரியதர்ஷன் தெரிவிக்கின்றார்.

“இத்தனைக்கும் கடின பந்து கிரிக்கெட் விளையாடுவதற்குரிய போதுமான உபகரணங்கள் எவையும் கலையரசியிடம் சொந்தமாக இல்லை. அவரிடமிருந்த பேட் கூட நல்லதில்லை. என்னிடமிருந்த சில உபகரணங்களை அவருக்கு வழங்கினேன். மாவட்ட பயிற்சியாளர் ஒரு பேட்டை வழங்கினார். அவருக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் கிடைக்குமாயின் பேருதவியா இருக்கும்’, எனவும் பயிற்சியாளர் பிரியதர்ஷன் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையிலும் கிரிக்கெட்டின் அனைத்துத் துறைகளிலும் கலையரசி சிறந்து விளங்குகிறார் எனவும் அவரின் பயிற்சியாளர் கூறினார்.

கலையரசியின் தந்தை, கூலி வேலையில் கிடைக்கும் குறைந்த வருமானத்தை வைத்தே குடும்பத்தை நடத்தி வருகின்றார். அதற்குள்தான் தனது மகளை கிரிக்கெட் துறையில் உயர்ந்த நிலையில் வைத்துப் பார்ப்பதற்கான செலவுகளையும் அவர் ஈடுசெய்ய வேண்டியுள்ளது.

“கிரிக்கெட் பயிற்சி மற்றும் போட்டிகளுக்காக அந்த ஊருக்கு வாருங்கள், இந்த ஊருக்கு வாருங்கள் என்று கலையரசியை அழைப்பார்கள். செலவுகளை யோசித்துக் கொண்டிருக்க முடியாது அழைத்துக்கொண்டு செல்வேன். எனது வருமானத்தில் அதிகமானதை அவருக்காகவே செலவிடுகிறேன்” என, தனது நிலையை தந்தை சதாசிவம் பகிர்ந்து கொண்டார்.

19 வயதுக்குட்பட்டவர்களைக் கொண்ட தேசிய கிரிக்கெட் பெண்கள் அணிக்காக, இம்முறை 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் தமிழர்கள். கலையரசியுடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த கிரிஸ்ரிகா செல்வராசா எனும் தமிழ் மாணவியும் தெரிவாகியுள்ளார்.

# மிருசுவில் பெண் மீது வாள்வெட்டு; 2 வருடங்களின் பின் ஒருவர் கைது!

மிருசுவிலில் பெண் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் 2 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பணத்துக்காக அந்தப் பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 26 வயதுடையவரே கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார் .

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மேதிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் 2 ஆண்டுகளின் பின்னர் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து அலைபேசி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பணம் மற்றும் அறிவுறுத்தலில் இந்த தாக்குதலை மேற்கொண்டேன் என தெரிவித்துள்ளார். இதேவேளை, ஒட்டுசுட்டான் மற்றும் பாலாவி பகுதிகளில் 3 மாதங்களுக்கு முன் இடம்பெற்றவாள்வெட்டுவன்முறைச்சம்பவங்களுடனும் சந்தேக நபருக்கு தொடர்புள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆண் ஒருவரின் சடலம் ஹோமாகமவில் மீட்கப்பட்டது!

ஹோமாகம பிரதான பஸ் நிலையத்துக்கு பின்புறம் உள்ள கால்வாயில் மர்மமான முறையில் உயிரிழந்த ஆணொருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

119 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த தகவலின்படி, சுமார் 8 அடி ஆழமுள்ள கால்வாயில் இருந்து சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக்கத்தக்கவர் என்றும் எனினும் அவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இது கொலையா? அல்லது கால்வாயில் விழுந்து இறந்துள்ளாரா? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள சுவிஸின் உதவியை எதிர்பார்க்கின்றோம்

## சுவிஸ் தூதுவரிடம் நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் உதவியை நாடுவதாகத் தெரிவித்துள்ள நீதித்துறை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, உத்தேச 21ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் அந்நாட்டு தூதுவருக்கு விளக்கமளித்துள்ளார்.

நீதிமற்றும்அரசமைப்புமறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் டொமினிக் பர்லர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் உத்தேச 21ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும், அரசியல் ஸ்திரத்தன்மையுடன் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது தொடர்பிலும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தூதுவருக்கு விளக்கமளித்தார்.

இலங்கையும் சுவிட்ஸர்லாந்தும் வலுவான பொருளாதார மற்றும் அரசியல் நட்புறவின் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாகவும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் உதவியை நாடுவதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள் தொடர்பாகத் தாம்கரிசனைகொள்வதாகவும், அவற்றை முறியடிக்க தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வேன் எனவும் தூதுவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் உயிரிழந்த மகனின் கண்கள் பெற்றோரால் தானம்!

### குவியும் பாராட்டுக்கள்

விபத்து ஒன்றில் உயிரிழந்த மகனின் கண்களை பெற்றோர் தானம் செய்துள்ளார்கள்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

அநுராதபுரம் மாவட்டம் கலென்பிந்துனுவெள, கெட்டலாவ பகுதியைச் சேர்ந்த அலுத்தியுல்வெள மகா வித்தியாலயத்தில் தக்ஷித இமேஷ் தனபால என்ற 16 வயதுடைய மாணவன் கல்வி கற்று வந்துள்ளார். இந்நிலையில், கடந்த மே 31 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் மூளைச்சாவு அடைந்து உயிரிழந்தார். இதனையடுத்து, தக்ஷித இமேஷ் தனபாலவின் கண்களைத் தானம் செய்ய பெற்றோர் சம்மதித்தனர்.

பின்னர் அவரது கண்களில் இருந்து அகற்றப்பட்ட கருவிழிகள் உடனடியாகக் கொழும்பில் உள்ள கண் தான தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அநுராதபுரம் கிளையிலுள்ள கண் தானச் சங்கத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எஸ்.சந்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இறந்த மாணவனின் இறுதிச் சடங்கிற்கு முன்னர் கொழும்பில் இரண்டு இளைஞர்களுக்கு விழிவெண்படல மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு அவர்கள் பார்வையைப் பெற்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் விழிவெண்படல ஒட்டுதலுக்காகக் காத்திருக்கின்றனர் எனவும், இந்த முறையில் கண்தானம் செய்கின்றமை ஓர் உன்னத செயல் என்றும் டபிள்யூ.எம்.எஸ். சந்தன தெரிவித்துள்ளார். பெற்றோரின் மேற்படி செயலை சமூக வலைத் தளத்தில் பலரும் பாராட்டி வருகிறார்கள

## வவுனியாவில் தீப்பற்றி எரிந்த சூரிய மின் உற்பத்தி நிலையம்!



வவுனியா கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு தீப்பரவல் ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையத்திலேயே திடீரென இவ்வாறு தீப்பற்றியது

இதன்போது அந்த நிலையத்தில் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய ஒளி மின்உற்பத்தி உபகரணங்கள் தீப்பற்றி எரிந்தன.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய மின்கலங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போதுதீயைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவர நகரசபையின் தீயணைப்பு பிரிவுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு உருளைக் கிழங்கு பங்களாதேஷால் வழங்கப்படும்

### அந்நாட்டு பிரதமர் தெரிவிப்பு



பங்களாதேஷில் மக்கள் தொகை அதிகம் உள்ள போதிலும் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வாக இலங்கைக்கு உருளைக்கிழங்கை வழங்குவதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் எசல வீரகோனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் ரஷ்யா – உக்ரைன் நெருக்கடி ஆகியவற்றுக்கு தீர்வாக பங்களாதேஷ் மேலும் பயிர்களை பயிரிட நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பிரதமர் தெரிவித்தார்.

பங்களாதேஷ் ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு வகையான விதைகளை பரிசோதித்து வருகின்றனர் எனவும் தெற்காசியாவின் பொது எதிரியான வறுமையை எதிர்த்து நாடுகள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக இந்திய திரைப்படத்துறை பிரமுகர்களை சந்தித்தார் ஹரின்!





சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராயும் முயற்சியில், இலங்கையில் உள்ள பல இந்திய திரைப்படத்துறை பிரமுகர்களைச் சந்தித்துள்ளார்.

அந்த வகையில், பிரபல பொலிவுட் நடிகர் டினோ மோரியா மற்றும் நடிகை சித்ரங்கதா சிங் ஆகியோர் சமீபத்தில் இலங்கையில் இருந்தபோது அவர்களை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனித்தனியாக சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவர்களது சந்திப்புகளின் போது, இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலாத் தளமாக இலங்கையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக அமைச்சர் பெர்னாண்டோ விளக்கமளித்திருந்தார் .

அத்தோடு பொலிவுட் படங்களுக்கு இலங்கையையும் ஓர் இடமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் அவர் விவாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திலிப் வெதவாராச்சியின் மகனையும் மருமகளையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 07

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சியின் மகன் மற்றும் மருமகள் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சியின் மகனான தங்காலை முன்னாள் நகர முதல்வர் ரவிந்து வெதாராச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோர் பாதுகாப்பற்ற முறையில் கப்ரக வாகனத்தின் பிற்பகுதியில் குளிர்சாதனபெட்டியை ஏற்றி தெற்கு அதிவேக வீதியில் பயணிப்பதற்கு முயற்சித்திருந்தனர்.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியமையை அடுத்து, சந்தேகநபர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இதுதொடர்பான காணொலியும் சமூக ஊடகங்களில் வெளியாகி, சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அதிவேக வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மேற்படி சந்தேகநபர்களை கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், குறித்த சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், சந்தேகநபருக்கு தங்குமிடத்தை வழங்கிய மாத்தறை – பதலவத்தை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்.பல்கலை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமும் யாழ். வர்த்தகத் தொழிற்துறை மன்றமும் புரிந்துணர்வில்!



ஈழ வளநாட்டின் மகுடமாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நீண்டதொரு வரலாற்று பின்னணியைக் கொண்ட தேசியப் பல்கலைக்கழகம் ஆகும். ‘மெய்பொருள் காண்பது அறிவு’ என்கின்ற மகுடவாசகத்துக்கு அமைவாக இங்கு செயற்படும் பத்து பீடங்களும் தொடர்ச்சியான கற்பித்தல், ஆய்வு செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அதற்கும் அப்பால் பிரதேச தேசியரீதியான சமூக பொருளாதார மேம்பாட்டுக்குப் பாரிய பங்களிப்பை செய்துவருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற பீடங்களில் குறிப்பாக 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமானது முதன்மைவாய்ந்த பீடமாக விளங்குவதுடன் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்றதுடன் தற்போது இப்பீடமானது திருநல்வேலி கலாசாலை வீதியில் கம்பீரமாக புதுப்பொலிவுடன் அமைந்து காட்சி தருகின்றது.

இந்தப் பீடத்தில் சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் விரிவுரையாளர்கள் உட்பட 60 இற்கும் மேற்பட்ட கல்விசார் உத்தியோகத்தர்களும் 20 இற்கு மேற்பட்ட கல்விசாரா ஊழியர்களும், ‘தம் கடன் பணி செய்து கிடப்பதே’ என்பதற்கமைய கடமை செய்து வருகின்றார்கள்.

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற முன்னோர்களின் வாக்குக்கு அமைவாகப் பல விரிவுரையாளர்கள் அண்மைக் காலத்தில் இந்தியா, பங்களாதேசம், சீனா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு கடல் கடந்து, கண்டம் கடந்து சென்று தமது கலாநிதிப் பட்டத்தை கணக்கியல், சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், நிதி முகாமைத்தும், சுற்றுலா போன்ற துறைகளில் நிறைவு செய்ததுடன்



மேலும் போதிய அளவு தேசிய மற்றும் சர்வதேச ரீதியான செயற்றிட்டங்களில் பணி செய்த அனுபவங்களுடன் உள்ளனர்.

இத்தகைய சிறந்த புத்திஜீவிகளை உள்வாங்கியுள்ள பீடத்துடன் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (Sri Lanka Institute of Marketing) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (Chartered Accountants of Sri Lanka), பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு (Security Exchange Commission) போன்ற தொழில்வாண்மை நிறுவனங்களுடனும் மற்றும் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இணைந்து செயற்பட்டு வருகின்றது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்துடன் பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு தொண்டு நிறுவனங்கள் பல்வேறுபட்ட சமூகமட்ட அபிவிருத்தி திட்டங்களிலும், வலுவூட்டல் நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது.

ஆனாலும் நீண்டகாலமாக யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்துக்கும், முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் சேர்ந்து பணிபுரிய வேண்டும் என்ற வேட்கை நீண்ட காலமாகக் கருவில் இருந்த போதும், 08.06.2022ஆம் ஆண்டு ஏற்படுத்தி கொள்ளப்படுகின்ற இந்த உடன்படிக்கையுடன் சாத்தியமாகிற்று. மேலும் கூட்டாக செயற்படுதல் என்பது சட்ட ரீதியான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது இந்த உடன்படிக்கை இரு நிறுவனங்களையும் வளர்ச்சிப் பாதையில் கால் பதிக்க வழிகோலும் என்பதில் ஐயப்பாடில்லை.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் புரவலா சமூகம் போன்றவர்களுக்கும் பல்வேறு வழிகளில் நன்மையை ஏற்படுத்தும். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் வாயிலாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் பின்வரும் வழிகளில் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு பாரிய அளவில் பின்வரும் விதத்தில் பங்களிப்பை வழங்க முடியும். யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் அங்கத்தவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், போன்றனவற்றுக்குவளவாளர்களாக எமது பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் தொழிற்படுதலுடன் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களை வகுப்பதில் உதவுதல். குறுகியகால டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளை அறிமுகப்படுத்துதல் மூலமாக அங்கத்தவர்களின் தொழில் சார் அறிவைப் பெருக்கி கொள்ள உதவுதல்.

தொமிற்துறை நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலையை சிறந்த முறையில் முகாமை செய்வதற்குரிய தந்திரோபாய ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பங்குதாரர்களாகச் செயற்படுதல், வணிகத்தின் வளர்ச்சி ஆராய்ச்சிகள், ஆலோசனைகள் முதன்மையான இடத்தை வகிக்கின்றது. இவ்வாறான ஆலோசனைகள் தேவைப்படும் போது முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் நிபுணர் குழு தேவையான ஆலோசனைகளை வணிக குழாமுக்கு வழங்குவதன் மூலம் தொழிற்துறையின் செயற்பாட்டை மேம்படுத்த உதவும்.

இந்த உடன்படிக்கையின் மூலம் மாணவர் சமூகம் பல்வேறு வழிகளில் நன்மையைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்களுக்குத் தமது பட்டப்படிப்பின் ஓர் அங்கமாக அமைந்துள்ள உள்ளகப் பயிற்சிக்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் மாணவர்களுக்கு பகுதி – நேர வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளுதலுக்கு உதவுதல். யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம் செயற்படுத்தும் செயற்திட்டங்களில் மாணவர்கள் நேரடியாகப் பங்குபற்றி பயிற்சிகளை பெற்றுக்கொள்வதன் வழியாக மாணவர்கள் தங்கள் நடைமுறை அறிவை விருத்தி செய்துகொள்வதுடன் விழிப்புணர்வையும் பெற்றுக்கொள்வர். சில மாணவர்கள் தொழில் முயற்சியாளர்களாக காணப்படுவதால் இத்தகைய மாணவர்களின் பங்குபற்றுதல், உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேசே மட்டத்திலும், புதிய உற்பத்திகளுக்கு அங்கீகாரம் பெற வழிசெய்யும். இதனால் மாணவர்கள் தமது உற்பத்திகளுக்கு அதிக சந்தைவாய்ப்புக்களைப் பெறுவார்கள்.

மாணவர்களிடையே காணப்படுகின்ற தொழில் முயற்சியாளர்களை யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதுடன் ஆண்டுதோறும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தால் நிகழ்த்துவதற்குத் தீர்மானித்திருக்கும் ‘இளம் தொழில் முயற்சியாளர் தினத்தில்’ சிறந்த மாணவர்களுக்கான விருதை வழங்குதல். இவ்வாறு இந்த அற்புதமான புரிந்துணர்வு உடன்படிக்கையின் வாயிலாக மாணவர்கள் மேற்குறிப்பிட்ட நன்மையை அனுபவித்துக் கொள்ள முடியும்.

மேலும் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றமும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் ஒன்றிணைந்து வணிகக் கண்காட்சியை எதிர்காலத்தில்ஏற்பாடுசெய்வதுடன்தொடர்ச்சியான இரு அமைப்புகளும் சேர்ந்து தொழில்முயற்சி பற்றி தொடர்ச்சியான விழிப்புணர்வை மக்கள் மத்தியிலும், மாணவ சமூகத்துக்கு இடையேயும் ஏற்படுத்தல். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேறாய் இலையுதிர் காலத்து மரம் போல் சோபை இழந்து காட்சிதரும் வணிகமும் வணிகர்களும் இளவேனில் காலத்தில் காலடி வைப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதனூடாகமாணவர்களும்பரந்தவெளிப்பார்வையைப் பெற்று தம்மை சமூக ஊட்டங்களுக்குள் உள்வாங்கிக்கொள்வார்கள் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க இடமில்லை.

# பொருளாதார சவால்களை தணிப்பதற்கு உதவுங்கள்!

## சீனாவிடம் இலங்கை கோரிக்கை

இலங்கையில் பொருளாதார சவால்களைத் தணிப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமாறு சீன அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுக்கிறேன் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, தூதுவர் ஜென்ஹோங் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பாக விளக்கியதுடன், இருதரப்பு ஈடுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையின் போது சீனாவின் தாராளமான உதவிகளையும் ஆதரவையும் பாராட்டிய அதே வேளையில், இலங்கையில் பொருளாதார சவால்களைத் தணிப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமாறு சீன அரசாங்கத்திடம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இரு தரப்பினரும் பன்முக உறவுகளையும் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பையும் பாராட்டினர்.



# வலி.வடக்கு நவக்கிரி, வித்தகபுரம் பகுதியில் மாலைநேரக் கல்வி நிலையக் கட்டடம் திறப்பு

வலிவடக்கு நவக்கிரி, வித்தகபுரம் பகுதியில் மாலைநேரக்கல்விநிலையக்கட்டடமொன்றுஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நவக்கிரி, வித்தகபுரம் விடியல் மக்கள் முன்னேற்றக் கழகத்தால் லண்டன் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் நிதி அனுசரணையுடன் மாலைநேரக் கல்வி நிலையக் கட்டடம் கட்டப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்ற திறப்புவிழாவில் முதன்மை விருந்தினர்களாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனும், ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் நிர்வாக உறுப்பினர் கந்தையா பிரபாகரனும் கௌரவ விருந்தினர்களாக அப்பகுதி கிராம அலுவலர் ஜெயவிந்தன், ஏ.வி.ஆர். அறக்கட்டளைப் பணிப்பாளர் லயன் பொன்னுத்துரை சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இந்நிகழ்வில் புதிய கல்விநிலையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் பெயர் பலகையும் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

# சகல விகாரைகளிலும் மேலதிக பயிர்ச்செய்கை

## திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவிப்பு

உணவு தட்டுப்பாடு சவாலை வெற்றிகொள்ள நாடுதழுவிய ரீதியில் உள்ள சகல விகாரைகளிலும் மேலதிக பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் உணவு தட்டுப்பாட்டையும் எதிர்கொண்டால் நாடு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.

ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும் என மல்வத்து பீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாயத்துறையைப் பாதுகாக்கும் பேராசிரியர் ஒன்றியத்தினர் 4 ஆம் திகதி சனிக்கிழமை 'உணவு தட்டுப்பாடு சவாலை வெற்றிகொள்ளும் செயற்திட்டத்தை' மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களிடம் முன்வைத்தனர்.

பல்வேறு காரணிகளால் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசியல் நெருக்கடி தற்போது சற்று தணிவடைந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேரிடும் என நம்பத் தகுந்த தரப்பினர் தொடர்ந்து எதிர்வு கூறுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் உணவு தட்டுப்பாட்டையும் எதிர்கொண்டால் முழு நாடும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.

உணவு தட்டுப்பாட்டு சவாலை வெற்றிக்கொள்ள நாடுதழுவிய ரீதியில் உள்ள சகல விகாரைகளிலும் மேலதிக பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டு மக்கள் தமது நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவேனும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும் என மல்வத்து பீட மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

விவசாயத்துறையில் நடைமுறைப்படுத்தியுள்ள தவறான கொள்கையை அரசாங்கம் இதுவரையில் திருத்திக்கொள்ள வில்லை.

உரம் பற்றாக்குறையால் கடந்த சிறுபோக விவசாய பயிர்ச்செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டது. எரிபொருள் மற்றும் உர பற்றாக்குறையால் தற்போதைய சிறுபோக விவசாய நடவடிக்கையும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு அரிசி விநியோகத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்படும்.

ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் ஒரு லட்சத்து 85 ஆயிரம் மெற்றிக்தொன் தொடக்கம் ஒரு லட்சத்து 95 ஆயிரம் மெற்றிக்தொன் வரையிலான அரிசியை மாதாந்தம் இறக்குமதி செய்ய நேரிடும் என பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்தார்.

# போதைப்பொருள் வழக்குகளின் சாட்சியாளர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூடு!

## பொலிஸாருக்கு பொலிஸ் திணைக்களம் மீது சந்தேகம்

பாரிய போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளில், அரச தரப்பு சாட்சியாளர்களாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தவர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக இடம்பெறும் துப்பாக்கிச் சூடுகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

சாட்சியாளர்கள் தொடர்பான விடயங்கள், பொலிஸ் திணைக்களத்துக்குள் இருந்து வெளியே கொடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் இதனூடாக விசாரணையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நேற்றுடன் (திங்கட்கிழமை) நிறைவடைந்த ஒரு வார காலத்தில் மாத்திரம் கொழும்பிலும் கொழும்புக்கு வெளியேயும் இத்தகைய 4 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அடையாளம் தெரியாதோரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அஹுங்கம – திக்கும்புர வீதியில் பாங்சாலிய வித்தியாலயம் அருகே நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். திக்வெல்ல – தம்பகஸ் ஆர பகுதியைச் சேர்ந்த 26 வயதான கசுன் சாமர எனும் நபரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் திக்வல்ல, வலஸ்கல பகுதியைச் சேர்ந்த தனது நண்பருடன் காரில் பயணித்துக்கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத இருவர் மோட்டார் சைக்கிலில் வந்து, 'சாமர என்பது நீரா' என விசாரித்த பின்னர் துப்பாக்கிச் சூடு நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந் நிலையிலேயே திக்வெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நபர் கடந்த 2021 ஜுன் 13 ஆம் திகதி வெலிகம – பொல்அத்து மோதர பகுதியில் படகூடாகக் கடத்தப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட 218 கிலோ 800 கிராம் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புபட்டவர் எனக் கூறி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தவராவார்.

அவரை அரசாங்க தரப்பு சாட்சியாளராகப் பயன்படுத்த திட்டமிருந்த நிலையில், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படுகிறது. இவ்வாறான நிலையிலேயே அவரின் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கே மீள விற்பனைசெய்தமை தொடர்பில் கடந்த 2020 ஆம் ஆண்டு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இந் நிலையில் அது தொடர்பான விசாரணைகளில், தெற்கு கடற்பரப்பில் படகுகள் ஊடாகக் கொண்டுவரப்படும் போதைப் பொருளில் ஒரு தொகை, போதைப் பொருள் வர்த்தகர்களுக்கே மீள விற்பனைச் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகத் தெரியவந்திருந்தது.

இது தொடர்பாக சி.ஐ.டி. விசாரணைகளை முன்னெடுக்கும் நிலையில், போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் பலர் கைதுசெய்யப்பட்டனர். அது தொடர்பான வழக்கின் அரச சாட்சியாளரே அளுத்கமவில் கடந்த 3 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் புறக்கோட்டை – பெஸ்டியன் மாவத்தை தனியார் பஸ் நிலையத்தின் நுழைவாயில் அருகே, கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பணிமனை தெரியும் தூரத்தில், கடந்த மே 30ஆம் திகதி முற்பகல் அடையாளம் தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மற்றொரு முன்னாள் இராணுவ வீரர் காயமடைந்தார்.

இந்த துப்பாக்கிச் சூடு, அளுத்கமவில் கடந்த 3 ஆம் திகதி கொல்லப்பட்ட நபரின் உறவினர் ஒருவரை (மச்சினன்) இலக்கு வைத்தது எனவும், வழக்கொன்றுக்கு சென்றுதிரும்பிக்கொண்டிருந்த இராணுவ வீரர்கள் ஆள் அடையாளம் மாறியதில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது.

மேற்படி உறவினரும், பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கே மீள் விற்பனைசெய்யப்பட்ட வழக்கின் அரச சாட்சியாளர் எனக் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள், புறக்கோட்டையிலிருந்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக சென்று லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து டி.ஆர். விஜேவர்தன மாவத்தை ஊடாக மருதானை நோக்கி தப்பிச் சென்றுள்ளமையும், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் போலியானது எனவும் விசாரணைகளை முன்னெடுக்கும் சி.சி.டியின் திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரணைப் பிரிவு வெளிப்படுத்திக்கொண்டுள்ளது. இந் நிலையிலேயே தற்போது பிறிதொரு கோணத்தில் எழுந்துள்ள சந்தேகத்தின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

இவ்வாறான பின்னணியிலேயே பாரிய போதைப் பொருல் வழக்குகளின் சாட்சியாளர்கள் இலக்கு வைக்கப்படுகின்றமை தொடர்பாகப் பொலிஸ் தலைமையகத்தின் விசேட கவனம் திரும்பியுள்ளதாக அறிய முடிகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2022இல் வெளியிடப்பெற்றது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -27**



நேற்றைய பத்தியில் குறிப்பிட்ட குளறுபடிகள் நல்லாட்சி காலத்தில் கூட நடைமுறைப்படுத்தப்பட்ட திறனற்ற நிதி நிர்வாகம், இருந்த வளங்களைப் பிரயோசனப்படுத்தாத அணுகுமுறை, அரசி யல் அடாவடித்தனம், அரசியல் நியமனங்கள் என்பவற்றால் நேர்ந்தவை. தோல்வியுறும் நிறுவனங்கள் தங்கள் நட்டங்களைப் பொது மக்களின் மீது சுமத்தி விடுகின்றன.

ஆனால், பொருளாதார பகுதியில் ஏற்படும் ஊழல்களையும் வீழ்ச்சிக ளையும் அறிந்தும், ராஜபக்ஷக்களுக்கு சர்வதேசம், சீனாவுக்குப் போட்டியாக நிதி உதவிகளைத் தந்தது. இவையெல்லாம் நாட்டின் அத்திபாரமான பிரச்சினைகளை அணுகி அதன் மூலம் ஒரு ஸ்திரத் தன்மையை உருவாக்கிக் கொள்ளவல்ல. அவர்கள்(ராஜபக்ஷக்கள்) மக்களின் அமோக ஆதரவில் பதவியில் இருப்பதால் அவர்கள் மூலம் தங்களது சுய லாபங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே.





இதில் இந்த அரசியல்வாதிகள் (ராஜபக்ஷக்கள்) நடத்திய ஊழல்களின் சில உதாரணங்களைப் பார்த்தால் அதனை அறிந்து கொண்டுதான் அவர்கள் ஆட்சிக்கு சர்வதேச உதவிகள் கூட தரப்பட்டன என்பது புரியும்.

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் கிடங்கில் விழுங்கப்பட்ட மூன்றரைக் கோடி ரூபா வழக்கிலிருந்து கோட்டாபயவும் அவரது கூட்டாளிகளும் விடுவிக்கப்பட்டார்கள்.

கோட்டாவின் மிக நெருங்கிய சகாவான டிரான் அலஸ் பன்னிரண்டரைக் கோடி ரூபா மோசடி வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

திவிநெகும துறையில் இருந்து கையாண்ட சுமார் 30 கோடி ரூபா வழக்கிலிருந்து பஸில் ராஜபக்ஷ விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கோட்டாபயவின் ஆலோசகரான லலித் வீரதுங்க மற்றும் அனு பல்பிட்ட சம்பந்தப்பட்ட 60 கோடி ரூபா முறைகேடு வழக்கில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மல்வானை பகுதியில் 20 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட அரச பணத்தைப் பாவித்து மாளிகையும் நீச்சல் தடாகமும் கட்டிய வழக்கில் இருந்து பஸில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மிக் 29 விமானக் கொள்முதலில் 15 லட்சம் அமெரிக்க டாலர்களை திருடிய ராஜபக்ஷக்களின் மைத்துனர் உதயங்க வீரதுங்க வழக்கிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். ஆயின் துபாய் அரசு அவரை வேண்டப்பட்ட நபராகவே அறிவித்துள்ளது.

சீல்வைக்கப்பட்ட அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மதுபான தொழிற்சாலை எந்தத் தண்டனையுமின்றி அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் ஏமாற்றினார் எனக் கூறப்படும் தொகை ஒரு பில்லியன் ரூபா. அவர் மேலும் 40 மில்லியன் ரூபாவை அரசுக்கு நட்டம் ஏற்படுத்தினார் என்ற வழக்கில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

அதேபோல் மஹிந்த குடும்பத்தவருக்குச் சொந்தமானதும் 365 மில்லியன் ரூபா மோசடியுடன் இணைக்கப்பட்டதுமான தொலைக்காட்சி நிறுவனம் மீண்டும் செயற்பட நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

ராஜபக்ஷக்கள் தங்களது தந்தையாருக்கு அமைத்த நினைவு இல்லம் அரசிலிருந்து திருடிய 33 மில்லியன் ரூபா பணத்தில் கட்டப்பட்டது என கோட்டாபய மீது குற்றம்சாட்டப்பட்டது. ஆயினும் வழக்கிலிருந்து அவர் விடுதலையானார். இந்த நினைவு இல்லம் மக்களால் – போராட்டக்காரர்கள் – இப்போது அழிக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ நிலங்கள் மோசடி பற்றிய இன்னொரு வழக்கில் 36.5 பில்லியன் ரூபாவுக்குக் கணக்கு எதுவும் காட்டாமல் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர்களுக்கு நீதித்துறையில் என்றுமே ஆதரவாக இருந்து, பின்னாளில் பிரதம நீதியரசரான மொஹான் பீரிஸ் மீது சுமத்தப்பட்ட நிலங்கள் மோசடி வழக்கில் இருந்து அவரும் விடுவிக்கப்பட்டார்.

இவை ஆதாரங்களில் அமைந்த சீர்கேடுகள். சர்வதேசத்திடம் இந்த ஆதாரங்களும் பின்னணி விவரங்களும் உண்டு. ஆயின் அதிகாரத்தில் அவர்களே இருந்ததால் அவர்களுடனேயே பேரங்கள் பேசப்பட்டன.

அவை தவிர, ராஜபக்ஷக்களின் கையாடல் சொத்துக்கள் என்றும், அவற்றில் பெறப்பட்ட சாதனங்களும் என்று கூறப்பட்ட விவரங்களும் கூட சமூக ஊடகங்களில் வலம் வந்தன. அவையும் உலா போகின்றன.

ஆனாலும் நாடு முழுவதும் ஜனநாயகத்தில் நீந்த வேண்டுமென்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எவ்வளவுதான் வாள்,வாள் என்று கத்தினாலும், தனி உறுப்பினரான ரணில், மக்கள் நம்பிக்கை இழந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் இயங்குகிறார் என்று



விமர்சனங்கள் எழுப்பினாலும், ரணில்தான் மேலைத் தேய நாடுகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வல்லவர் என்று கணித்து, அவரை ஆட்சியில் அமர வைப்பதில் முடிவை எடுத்தது இந்தியாவும் மற்ற மேற்கு நாடுகளும்தான் என்ற நிதர்சனத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா மீதான தனது கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வேண்டிய தேவை தனக்கு உண்டு என்று கருதி இந்தியா தனது முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு படியே இது. அதில் இணைந்து கொள்ளும் அணுகுமுறை தமிழ் மக்களுக்கு தேவை.

காலில் கிட்டும் பந்துகளை பார்வையாளர்களுக்காக எகிறி எகிறி அடிக்கலாம். ஆனால் அவை நோக்குடன் அடிக்கப்பட வேண்டும். அது முக்கியம்.

(வளரும்)



காலைக்கதிர்
Kalaikkathir

# ‘20’ பெரும் சாபக்கேடு!

# நாட்டுக்காக 21ஐ ஆதரிக்க திகாம்பரம் எம்.பி. அழைப்பு



**அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம்தான் இந்த நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாக அமைந்தது. எனவே, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத் துக்கு அதிகாரங்களைப் பகிரும் 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் ஆதரிப்போம்.**

**– இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.**

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்று உச்சக்கட்டத்தில் உள்ளது. இந்நிலைமைக்கு ராஜபக்ஷ தரப்பே பொறுப்புக்கூற வேண்டும்.

ராஜபக்ஷ ஆட்சியில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளால்தான் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை. புதிய அரசு அமைந்த பிறகும்கூட வரிசைகள் தொடர்கின்றன.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளது. அதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழு ஆதரவை யும் வழங்கும். எனினும், 21ஆவது திருத் தச் சட்டமூலம் நிறைவேறுவது மொட்டுக் கட்சியின் கைகளில்தான் தங்கியுள்ளது. ஏனெனில் அக்கட்சிக்குத்தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளது.

21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறினால்தான் நாட்டில் ஜன நாயகம் மலரும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 19ஐ இல்லாதொழித்து 20 ஐக் கொண்டு வந்த தால்தான் நாட்டுக்குச் சாபம் ஏற்பட்டது.

அதேவேளை, தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணத்தில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்படக்கூடாது. மக்களுக்கு நியாயமான முறையில் நிவாரணம் பங்கிடப்பட வேண்டும்.

சஜித் பிரேமதாஸ பிரதமராகி இருந்தால்கூட நான் அமைச்சுப் பதவியை ஏற்றிருக்கமாட்டேன். மக்கள் ஆணையுடன் அமையும் அரசில்தான் அமைச்சுப் பதவியை ஏற்பேன். அதுவும் எமது மக்களுக்குச் சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்கள் எமது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கும் நிவாரணம் அவசியம். அதற்கான வலியுறுத்தல் தொடரும் - என்றார்.

---

## சீமெந்து விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, 50 கிலோ கிராம் சீமெந்து மூடை ஒன்றின் விலை 3000 ரூபாவாகும்.

தற்போதைய டொலர் நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் இரண்டு வாரங்களில் எரிபொருள் விலையேற்றம் இருக்கும் என அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எனவே மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருள்களின் விலையை அதிகரிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் கருத்தின் பிரகாரம், எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததையடுத்து, மே மாதம் 24ஆம் திகதி விலையில் திருத்தம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டது.

தற்போதைய எரிபொருள் விலை சூத்திரம் மறைந்த நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தியதைப் போன்றது. இது ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. ஆனால் தற்போதைய சூத்திரத்தின்படி எரிபொருள் விலை உலக சந்தை விலைக்கு ஏற்ப அமலுக்கு வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜோன்ஸ்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் காலி முகத்திடலில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சம்பந்தமாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவரைக் கடந்த சில நாள்களாகத் தேடி வருகிறது. பல பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டபோதிலும் அவர் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட நால்வர் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்படவுள்ளனர் என கடந்த வாரம் சட்டமா அதிபர் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

---

## ‘21’ குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் நீடித்தன எனத் தெரிகின்றது.

பிரதமரை, ஜனாதிபதி பதவி நீக்கும் விவகாரத்தில் சர்ச்சை நீடிக்கின்றது. அத்துடன், அமைச்சுகளுக்கான நியமனம், பதவி நீக்கம், ஒதுக்கீடுகள் விவகாரத்திலும் இறுதி இணக்கப்பாடு இல்லை.

இவை தொடர்பில் கலந்துரையாடி, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் 21 இற்கு அனுமதி வழங்குவது குறித்துத் தீர்மானிப்பது என நேற்று இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

---

## தான் பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியை இழந்தமை முதல் நான் நாட்டின் பொருளாதாரம் குறித்து ஆய்வு செய்துவருகின்றேன். தற்போதையை நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை தவிர வேறு வழியில்லை.

நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அரசியல் கட்டமைப்பிற்குள் உள்வாங்க எண்ணியுள்ளோம். அவர்கள் அதற்கு தயார் என்றால் அவர்கள் அந்த நடைமுறையில் இணைந்து கொள்ளலாம். அதன் மூலம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற பதற்றத்தை சிறிது குறைக்க முடியும்.

அவர்கள் உள்ளே வரவேண்டும் அல்லது வெளியேற வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் சில அரசியல் மாற்றங்களை கொண்டுவந்துள்ளனர் – எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்துவைப்பது, கைதுசெய்வது போன்ற நடவடிக்கைகள் குறித்து பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, நீதிபதிகளை அடிப்படையாக வைத்தே கைதுகள் இடம்பெறுகின்றன, சமீபத்தைய வன்முறைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களே கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க சட்டத்தை எவர் மீறியிருந்தாலும் அவர்களின் தகுதியை கருத்தில் கொள்ளாமல் அவர்களை நீதிவிசாரணைக்கு உட்படுத்தவேண்டும். ராஜபக்ஷக்களிற்கும் இது பொருந்தும் என குறிப்பிட்டுள்ளார்.

---

# ஆயுதத்துடன் வந்தவர்களால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்

## மனித உரிமை ஆணைக்குழுவில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் முறைப்பாடு

மின்சாரத் தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த சீருடையினர், என்னை விசாரிப்பதாகக் கூறி விரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம்ராஜன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்..

கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவின் இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அசீஸிடம் அவரது முறைப்பாட்டை நேற்றுக் கையளித்தார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரிய நீலாவணையிலுள்ள எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு இராணுவத்தினரும், தங்களைக் கொழும்பு புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாகக் கூறினர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையைக் கேட்டேன். ஆனால், அவர்கள் தர மறுத்தனர் .

நான் கல்முனையில் உண்ணாவிரத மிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித்துருவி விசாரித்தனர்.

இறுதியில் வெளியில் நடமாடக்கூடாது என்று அச்சுறுத்தியதோடு எனக்கும் மனைவி, பிள்ளை மற்றும் மருமகனுக்கும் பயமுறுத்தி அச்சுறுத்தல் விடுத்துச் சென்றனர்.

இதற்கு முன்னும், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும், 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போதும் இனந்தெரியாத ஆயுதக் குழுக்கள், பொலிஸார், புலனாய்வுக் குழுவினர் எனத் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்து என்னை விரட்டினர். தற்போது மீண்டும் இந்த அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் மனித உரிமையுடன் சுதந்திரமாக வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன்.

சமூக சேவை செய்ய தடை ஏற்பட்டுள்ளது. உளவியல் ரீதியான தாக்கம் அதிகமாக உள்ளது. குடும்பத்தினரும் அச்சத்தில் உள்ளனர்.

எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் பயப்பீதியுடன் நடைபிணமாகக் குடும்பத்துடன் காலம் கடத்தி வருகின்றேன்.

இது தொடர்பாக எமது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசனிடமும் முறையிட்டுள்ளேன். இவர்களை அடையாளம் கண்டு எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## 3 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓட்டோ ஒன்றில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 24 வயதுடைய வினோதன் என்ற இளைஞனே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த மூன்று நாள்களில் நாட்டில் பதிவான ஐந்தாவது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்களில் ஆறு பேர் பலியாகியுள்ளனர்.

நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில், பொலிஸ் திணைக்களம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

உயிரிழந்த 24 வயதான நபர், கொழும்பு -15, அளுத்மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர்.

போதைப்பொருள் அல்லது வேறு வர்த்தகத்தால் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாட்டினால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரணமடைந்த நபர், போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் பிணையில் விடுக்கப்பட்டிருந்தவர்.

மரணமடைந்தவரின் பூதவுடல், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முகவத்துவாரம் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.